

# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் தெற்கு & மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ராயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| | மாலை 4.00 மணி | மயிலாடுதுறை | விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |
| 28.05.2025 புதன்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் மத்திய | அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---

"நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு"

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் அரசின் சாதனை விளக்க துண்டுப் பிரசுரங்கள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட எடப்பாடி, சங்ககிரி மற்றும் மேட்டூர் சட்டமன்ற தொகுதிகளில், திராவிட முன்னேற்ற கழக அரசின் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு!" சாதனை விளக்க பிரதிகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி தலைமையில், எடப்பாடி தொகுதி பார்வையாளர் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் நா.முருகவேல், சங்ககிரி தொகுதி பார்வையாளர் மாநில சுற்றுசூழல் அணி துணை செயலாளர் ஆர்.பி.செந்தில்குமார், மேட்டூர் தொகுதி பார்வையாளர் மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் அ.ரியா ஆகியோர் முன்னிலையில் வருகின்ற (24.05.2025 - சனிக்கிழமை) மற்றும் (25.05.2025 - ஞாயிற்றுக்கிழமை) மேற்குறிய இரு தினங்களிலும் பாகநிலை முகவர்கள் (BLA2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) அனைவரும் கீழ்கண்ட பட்டியலில் உள்ள பொறுப்பாளர்களுடைய மேற்பார்வையில் வீடுவீடாக சாதனை விளக்க பிரதிகளை கொண்டு சேர்க்க வேண்டும்.

| வ. எண். | ஒன்றியம்/நகரம் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|
| 1 | சங்ககிரி கிழக்கு ஒன்றியம் | பி.தங்கமுத்து, மாவட்ட கழக அவைத்தலைவர் |
| 2 | சங்ககிரி மேற்கு ஒன்றியம் | |
| 3 | எடப்பாடி மேற்கு ஒன்றியம் | க.சுந்தரம், மாவட்ட கழக துணை செயலாளர் |
| 4 | எடப்பாடி கிழக்கு ஒன்றியம் | |
| 5 | கொங்கணாபுரம் தெற்கு ஒன்றியம் | அ.த.சம்பத்குமார் மாவட்ட கழக துணை செயலாளர் |
| 6 | கொங்கணாபுரம் வடக்கு ஒன்றியம் | |
| 7 | மேட்டூர் நகரம் | திருமதி.எஸ்.எலிசபெத்ராணி, மாவட்ட கழக துணை செயலாளர் |
| 8 | கொளத்தூர் ஒன்றியம் | பி.பொன்னுசாமி, மாவட்ட கழக பொருளாளர் |
| 9 | எடப்பாடி நகரம் | பி.எ.முருகேசன் தலைமை செயற்குழு உறுப்பினர் |
| 10 | நங்கவள்ளி வடக்கு ஒன்றியம் | மு.ராமநாதன் தலைமை செயற்குழு உறுப்பினர் |
| 11 | நங்கவள்ளி மத்திய ஒன்றியம் | |
| 12 | நங்கவள்ளி தெற்கு ஒன்றியம் | |
| 13 | தாரமங்கலம் மேற்கு ஒன்றியம் | ப.காமராஜ் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் |
| 14 | தாரமங்கலம் நகரம் | |
| 15 | மகுடஞ்சாவடி தெற்கு ஒன்றியம் | மு.சௌந்திரராஜன் பொதுக்குழு உறுப்பினர் |
| 16 | மகுடஞ்சாவடி வடக்கு ஒன்றியம் | |
| 17 | மேச்சேரி கிழக்கு ஒன்றியம் | எஸ்.பி.ரவிக்குமரன் பொதுக்குழு உறுப்பினர் |
| 18 | மேச்சேரி மேற்கு ஒன்றியம் | |
| 19 | இடங்கணசாலை நகரம் | என்.பழனியப்பன் பொதுக்குழு உறுப்பினர் |
| 20 | சங்ககிரி நகரம் | திருமதி.எஸ்.தங்கமணி பொதுக்குழு உறுப்பினர் |

அது சமயம் ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (BLA2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC), கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" திட்டங்கள் அடங்கிய பிரதிகளை பொதுமக்களிடம் சென்றடைய உறுதி செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.,**
செயலாளர்
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

---

அரசு கலை - அறிவியல் கல்லூரி சேர்க்கைக்கு இணைய வழி விண்ணப்பப் பதிவு!

# 13 நாட்களில் - 1,61, 324 மாணவர்கள் பதிவு!

## உயர் கல்வித் துறை அமைச்சர் - முனைவர் கோவி.செழியன் தகவல்!

சென்னை, மே 21 -

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பப் பதிவு தொடங்கப்பட்ட 13 நாட்களில் 1,61,324 மாணாக்கர்கள் பதிவு செய்துள்ளனர் - என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:

07.05.2025 அன்று தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு தொடங்கப்பட்டது. 19.05.2025 அன்று மாலை 6 மணி நிலவரப்படி 1,61,324 மாணாக்கர்கள் விண்ணப்பப்பதிவு செய்துள்ளனர். இதில் 46,691 மாணவர்களும், 75,959 மாணவிகளும், 48 மூன்றாம் பாலினத்தவரும் ஆக மொத்தம் 1,22,698 மாணாக்கர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி உள்ளனர்.

மாணாக்கர்கள் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் தங்களது சேர்க்கைக்கான விண்ணப்பங்களை 27.05.2025 வரை பதிவு செய்து கொள்ளலாம். மாணாக்கர்களுக்கு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் தமிழ்நாடு முழுவதும் 165 உதவி மையங்கள் (Help Desk) மற்றும் மாணாக்கர் சேர்க்கை வழிகாட்டு சேவை மையங்கள் (Admission Facilitation Centre) நிறுவப்பட்டுள்ளன. அந்தந்த சேவை மையங்களை தொடர்பு கொள்ளலாம். மேலும், 04424342911 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவோ அல்லது dceofficehelpdesk@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவோ தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சென்னை மண்டலத்தில் உள்ள கீழ்க்கண்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்களின் தேவைக்கேற்பவும், வேலைவாய்ப்பு பெற்றுத்தரும் தனித்துவமான பாடப்பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன:

வழக்கமான கலை, அறிவியல், மேலாண்மை பாடப்பிரிவுகளோடு தனித்துவமான பாடப்பிரிவுகள்

இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி), கல்லூரி -

- இளநிலை புவியியல், சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை (Geography Travel and Tourism Management)
- மனையியல், ஊட்டச்சத்து மற்றும் உணவுச் சேவை மேலாண்மை (Home Science, Nutrition and Food Service Management)
- மனையியல், மருத்துவ ஊட்டச்சத்து மற்றும் உணவு முறை (Home Science - Clinical Nutrition & Dietetics)
- இந்திய இசை (Indian Music)
- அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), நந்தனம் - இளநிலை புள்ளியியல் (Statistics)
- டாக்டர். அம்பேத்கர் அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), வியாசர்பாடி
- இளநிலை மனையியல் ஊட்டச்சத்து மற்றும் உணவுச் சேவை மேலாண்மை மற்றும் உணவு முறை (Home Science Nutrition and Food Service Management and Dietetics), இளநிலை உளவியல் (Psychology)
- இளநிலை காட்சி தொடர்பியல் (Visual Communication)

காயிதேஇமில்லத் அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) - இளநிலை மனையியல் (Home Science),

அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆலந்தூர் - இளநிலை உளவியல்(Psychology)

மாநிலக் கல்லூரி, சென்னை - இளநிலை புவியமைப்பியல் (Geology)

- இளநிலை புள்ளியியல் (Statistics), இளநிலை காது கேளாத வாய் பேசாத மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கான பி.காம் மற்றும் பி.சி.ஏ B.Com(Hearing Impaired), BCA(Hearing Impaired)

மாணாக்கர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஆ. நெடுஞ்செழியன்

## மே 21 (2001)



சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் மூத்த மகனான இவர், சேலம் நகர இளைஞர் அணி அமைப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றி, மறைவெய்தியபோது சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.

சேலம் மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட பால்வள இயக்குநர் ஆகிய பொறுப்புக்களை வகித்தவர்.

கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலங்களில் நடைபெற்ற போராட்டங்கள் பலவற்றிலும் முன்னணியில் நின்று கழகத்தினரை வழிநடத்தி, அவர்களுடன் சிறை சென்றவர்.

"கழகக் காளை ஆ.நெடுஞ்செழியன் மறைந்துவிட்டார் என்ற இடி போன்ற செய்தியினைக் கேட்டு என்னைத் தேற்றிக் கொள்ள இயலாமல், என் தம்பியையும் தேற்றிட இயலாமல் தவிக்கிறேன். தம்பி செழியா, என்றும் வாழும் உன் புகழ்!" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.அய்யனார் தலைமையில், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கண்ணன் ஏற்பாட்டில் கூவனூர் ஊராட்சியைச் சேர்ந்த மாற்றுக் கட்சியினர் திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியை ஏற்று தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர், புதிதாக கழகத்தில் இணைந்த மாற்றுக்கட்சியினருக்கு மாவட்டச் செயலாளர் கழக வேட்டி அளித்து வரவேற்றார்.